6. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)—
தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) திருத்தச்சட்ட
முன்வடிவு, 1990

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)—
தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.